சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.

**Case No. OS. 353/2018**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06ம் நாள் வெள்ளிக்கிழமை

வாதித்தரப்பு சாட்சியாகிய வா.சா.1இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திரு.வ.சிவக்குமார், எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஹரிணி | தொழில் | கிளை மேலாளர்,<br>ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா,<br>கொழப்பலூர் கிளை. |
| தந்தை பெயர் | அன்புராஜ் | ஜாதி | |
| கிராமம் | கொழப்பலூர் | சமயம் | |
| தாலுக்கா | சேத்துப்பட்டு | வயது | 35 |

**06.02.2026 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி வங்கியில் கிளை மேலாளராக பணி புரிகிறேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்கு தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 27.02.2006 தேதியிட்ட கடன் விண்ணப்பம் அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 27.02.2006 தேதியிட்ட1ம் பிரதிவாதி எழுதி கொடுத்த கொதுவை ஒப்பந்தம் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 27.02.2006 தேதியிட்ட 2 மற்றும் 3 பிரதிவாதிகள் அளித்த உத்தரவாத ஒப்பந்தம் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 27.02.2006 தேதியிட்ட பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு அளித்த லெட்டர் ஆப் அரேஞ்ச்மெண்ட் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.02.2006 தேதியிட்ட கடிதம் இ.எம்.ரிஜிஸ்டர் உண்மை நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.02.2006 தேதியிட்ட கடிதம் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 14.07.1974 தேதியிட்ட அசல் கிரையப்பத்திரம் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.02.2006 தேதியிட்ட கணினி பட்டா **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்கான தீர்வை ரசீது **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. துளசி என்பவரின் இறப்பு சான்று அசல் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வெண்ணிலா என்பவரின் இறப்பு சான்று அசல் **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. துளசி என்பவரின் வாரிசு சான்று அசல் **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.02.2006 தேதியிட்ட வில்லங்கச்சான்று **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.02.2006 தேதியிட்ட வில்லங்கச்சான்று **வா.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 05.01.2009 தேதியிட்ட 1ம் பிரதிவாதி எழுதி கொடுத்த கடன் உயிர்ப்புக்கடிதம் **வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.11.2011 தேதியிட்ட 1ம் பிரதிவாதி எழுதி கொடுத்த கடன் உயிர்ப்புக்கடிதம் **வா.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 06.11.2014 தேதியிட்ட 1ம் பிரதிவாதி எழுதி கொடுத்த கடன் உயிர்ப்புக்கடிதம் **வா.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 30.11.2016 தேதியிட்ட 1ம்

பிரதிவாதி எழுதி கொடுத்த கடன் உயிர்ப்புக்கடிதம் **வா.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா கடனுக்குண்டான கணக்கு அறிக்கை **வா.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது வங்கி பணியாளர் அடையாள அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் சரி பார்க்கப்பட்டு) **வா.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாவில் கோரியுள்ளவாறு தீர்ப்பளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.